# நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.

**முன்னிலை**: திருமதி. ப.கனிமொழி, எல்.எல்.எம்.,
நீதித்துறை நடுவர் எண்.1,
ஜெயங்கொண்டம்.

2026 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01 ம் தேதி, சனிக்கிழமை
2057 திருவள்ளுவர் ஆண்டு பராபவ வருடம் ஆடி மாதம் 16 ஆம் நாள்
CC No.32/2021
(CNR No: TNAL070000582021)

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | : | அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர்,<br>ஜெயங்கொண்டம் காவல் நிலையம்,<br>குற்ற எண்: 895/2020. |

//எதிர்//

| | | |
|---|---|---|
| எதிரி | : | வெங்கடேசன் (34/2026) த/பெ.காசிநாதன்,<br>சாவடித்தெரு, அங்கராயநல்லூர்,<br>உடையார்பாளையம் தாலுக்கா, அரியலூர் மாவட்டம். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | குற்றம் சாட்டப்பட்டது | : | எதிரி மீது இ.த.ச பிரிவு 304 (A)ன் கீழ் | | |
| 2 | குற்றச்சாட்டு வனையப்பட்டது | : | எதிரி மீது இ.த.ச பிரிவு 304 (A)ன் கீழ் | | |
| 3 | சம்பவம் நடந்த நாள் | : | 01.08.2020 | | |
| 4 | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் | : | 01.08.2020 | | |
| 5 | எதிரி/எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற நாள் | : | கைது செய்யப்பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் | |
| | | | 05.08.2020 | 05.08.2020<br>(காவல் நிலைய பிணை) | |
| 6 | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 09.03.2021 | | |
| 7 | கு.வி.மு.ச பிரிவு 240(1)ன் கீழ் குற்றச்சாட்டு விளக்கி வினவப்பட்ட நாள் | : | 10.08.2022 | | |
| 8 | வழக்கின் சாட்சிகள் முதல் மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | | அ.சா.1 | 19.05.2026 | 19.05.2026 |
| | | | அ.சா.2 | 19.05.2026 | 19.05.2026 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | அ.சா.3 | 07.07.2026 | 07.07.2026 |
| | | | அ.சா.4 | 07.07.2026 | 07.07.2026 |
| 9 | எதிரி/எதிரிகளிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய நாள் | : | 09.07.2026 | | |

இவ்வழக்கு 09.03.2021 அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு வந்து 01.08.2026ம் தேதி என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 திருமதி. C.இராஜேஸ்வரி அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.T.S.ஸ்டாலின் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களையும் கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.....

## தீர்ப்புரை

1. கடந்த 01.08.2020ம் தேதி இரவு 19.45 மணியளவில் புகார்தாரரின் கணவர் இறந்துபோன சந்திரன் (எ) சந்திரகுமார் என்பவர் அவரது ஊர் அருகில் உள்ள ஏரிக்கு வெளிவாசல் போய்விட்டு திரும்ப வீட்டிற்கு வருவதற்காக ஏரிக்கரை தெருவில் உள்ள பாப்பம்மாள் வீட்டின் அருகில் வடக்கிலிருந்து தெற்காக ரோட்டின் இடதுபுறமாக நடந்து வந்து கொண்டிருந்தபோது அதே சாலையில் அவருக்கு எதிர் திசையில் தெற்கிலிருந்து வடக்காக வந்த TN 61 S 4740 என்ற டிராக்டர் மற்றும் நம்பர் இல்லாத டிரைலரில் முருங்கைக்காய் ஏற்றி வந்த வாகனத்தை எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து ரோடு போட ஜல்லி கொட்டியிருந்ததில் ஒதுங்கி நின்று கொண்டிருந்தவரின் வலது காலின் பாதத்தில் மேற்படி வாகனம் ஏற்றியதில் புகார்தாரரின் கணவர் வலதுபக்கமாக விழுந்ததில் வலதுபக்க தலையில் பலத்த அடிபட்டு சிகிச்சையில் இருந்தவர் 02.08.2020 அன்று இறப்பை ஏற்படுத்தியுள்ள எதிரியின் செய்கையானது இ.த.ச பிரிவு 304(A)ன் கீழ் தண்டிக்கப்படவேண்டியவர் என இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மேற்படி குற்ற அறிக்கையை பெற்ற இந்நீதிமன்றம் மேற்படி அறிக்கையை நன்கு பரிசீலித்து மேற்படி எதிரி மீது இ.த.ச பிரிவு 304(A)ன் படி வழக்கினை கோப்பிற்கு எடுத்துக்கொண்டது.

3. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரிக்கு அரசு தரப்பினரால் ஆதாரமாகக் கொள்ளப்பட்டதும், கு.வி.மு.ச பிரிவு 207ன் படி உள்ளதுமான வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது.

4. ஆவணங்களை பரிசீலனை செய்ததின் பேரில் எதிரி மீது குற்றச்சாட்டு வனைவதற்கு போதிய ஆதாரங்கள் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதியதால் எதிரி மீது இ.த.ச பிரிவு 304(A)ன் கீழான குற்றச்சாட்டு வனைந்து, விளக்கி வினவ எதிரி குற்றத்தினை மறுத்த காரணத்தினால் அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு வழக்க விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. புகார்தாரர் தரப்பில் குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 320ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு இந்த வழக்கில் உள்ள குற்ற பிரிவுகள் சமாதானம் ஆகாத குற்றம் என்பதால் இந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

6. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வாய்மொழி சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு அவர்கள் தரப்பில் அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்:–**

7. அ.சா.1 தேன்மொழி தனது சாட்சியத்தில் 2020ம் ஆண்டு ஒருநாள் இரவு 07.00 மணியளவில், தன் கணவர் கழுவந்தோண்டியில் உள்ள ஏரிக்கரைக்கு வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நடந்து சென்றுக்கொண்டிருந்தார். அப்போது அவருக்கு எதிர் திசையில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த டிராக்டர் தன் கணவர் மீது மோதி விபத்தினை ஏற்படுத்தியதாக தங்கள் ஊரைச் சேர்ந்தவர் தன்னிடம் வந்து கூறினார் என்றும், தான் உடனடியாக சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது, தன் கணவருக்கு பின்பக்க தலையிலும், காலிலும் அடிபட்டிருந்தது என்றும், தாங்கள் உடனடியாக அவரை கார் மூலம் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம் என்றும், பின்னர் அவரை மேல்சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம் என்றும், அன்றைய தினம் இரவு அவர்

சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் என்றும், தனது கணவர் மீது மோதி விபத்தினை ஏற்படுத்திய டிராக்டரை யார் ஓட்டினார்கள் என்று தனக்கு தெரியாது என்றும், தனது கணவருக்கு ஏற்பட்ட விபத்து சம்மந்தமாக ஜெயங்கொண்டம் போலீசார் தன்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள் என்றும், நீதிமன்றத்தில் தற்போது தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் அ.த.சா.ஆ.1 தன்னுடையதுதான் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

8. அ.சா.2 கார்த்திகேயன் தனது சாட்சியத்தில், 2020ம் வருடம் ஒருநாள் இரவு 07.30 மணியளவில் தனது அப்பா ஏரிக்கரைக்கு சென்றார் என்றும், அப்போது தான் வீட்டிலிருந்தேன் என்றும், தங்கள் வீட்டிற்கு 500 மீட்டர் தொலையில் தனது அப்பா சாலையின் ஓரம் நின்றுக்கொண்டிருந்தபோது, தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த டிராக்டர் தனது அப்பாவின் மீது மோதியதில் தனது அப்பாவிற்கு காலிலும், தலையிலும் அடிபட்டதாக தனக்கு போன் மூலம் தகவல் கூறினார்கள் என்றும், உடனடியாக தான் சம்பவ இடம் சென்று பார்த்தபோது, தனது அப்பாவிற்கு தலையிலும், காலிலும் பலத்த அடிபட்டிருந்தது என்றும், அவரை ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம் என்றும், பின்னர் மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம் என்றும், அங்கு சிகிச்சை பலனின்றி மறுநாள் காலை தன் அப்பா இறந்துவிட்டார் என்றும், தன் அப்பாவின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திய டிராக்டரின் ஓட்டுநர் யாரென்று தனக்கு தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளார்.

9. அ.சா.3 திருமுருகன் தனது சாட்சியத்தில், தன்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சிய கையொப்பம் அ.த.சா.ஆ.2ஐ தனது சொந்த வேலையாக காவல் நியைம் சென்றபோது போலீசார் தன்னிடம் பொற்றுக்கொண்டார்கள் என்று சாட்சியமளித்துள்ளார்.

10. அ.சா.4 குணசேகரன் தனது சாட்சியத்தில், உதவி ஆய்வாளர் ரவிச்சந்திரன் மற்றும் காவல் ஆய்வாளர்கள் தமிழரசி மற்றும் ஜெயராமன் ஆகியோரின் கையெழுத்து மற்றும் கையொப்பம் தனக்கு நன்கு தெரியும் என்பதால், அவருக்காக தான் கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், கடந்த 01.08.2020ம் தேதி ஜெயங்கொண்ட காவல் நிலைய உதவி ஆய்வாளர் ரவிச்சந்திரன் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது,

ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமணையில்இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயளியாக சிகிச்சையில்இருந்த சந்திரன் என்பவர் பேசமுடியாத நிலையில் இருந்ததால் அவரது மனைவி தேன்மொழி என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று நிலைய குற்ற எண் 895/2020, ச/பி. 279, 337 இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3 பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் வழக்கு கோப்பினை விசாரணை செய்யும் பொருட்டு ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்தார் என்றும், ஆய்வாளர் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கிருஷ்ணகுமார் மற்றும் திருமுருகன் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.4 தயார் செய்துள்ளார் என்றும், இந்த வழக்கின் விபத்தில் காயம்பட்ட சந்திரன் (எ) சந்திரகுமார் சிகிச்சை பலனின்றி 02.08.2020 தேதி அதிகாலை 05.00 மணிக்கு இறந்துவிட்டதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த வழக்கின் சட்ட பிரிவுகளான 279, 337 இதச விலிருந்து 304(A) இதச என மாற்றம் செய்து அறிக்கை அ.த.சா.ஆ.5 தயார் செய்துள்ளார் என்றும், இந்த வழக்கு விபத்தில் இறந்த சந்திரன் (எ) சந்திரகுமார்என்பவரின் பிரேதத்தை தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்தவமனையின் சவக்கிடங்கின் முன்வைத்து, சாட்சிகள் கார்த்திக், குகன், செந்தில் குமார், திருமுருகன் ஆகியோர் முன்னிலையில் பிரேத விசாரணை நடத்தியும் வாக்குமூலம் பதிவு செய்தும், பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ.6 தயார் செய்துள்ளார் என்றும், விசாரணையின் அடிப்படையில் சம்பவம் உண்மையென தெரியவந்ததால் எதிரியை தேடியபோது, 05.08.2020ம் தேதி 11.15 மணிக்கு ஜெயங்கொண்டம் காவல் நிலையத்தில் ஆஜரான எதிரியை குற்ற காரணம் கூறி கைது செய்து, நிலைய ஜாமீனில் விடுவித்துள்ளார் என்றும், விபத்தில் இறந்துபோன சந்திரன் (எ) சந்தரகுமார் என்பவரின் பிரேதத்தை பிணக்கூறாய்வு செய்த மருத்துவர் திரு.அருள்மதிகண்ணன் என்பவரை விசாரணை செய்து, பிணக்கூறாய்வு சான்றிதழ் அ.த.சா.ஆ.7 பெற்று அவரது வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், இவ்விபத்தில் சம்மந்தப்பட்ட TN 61 S 4740 என்ற பதிவெண் கொண்ட டிராக்கடரை மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பி, மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.செல்வராசு என்பவரை விசாரணை செய்து, மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.த.சா.ஆ.8 பெற்று, அவரது வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், இத்துடன் விசாரணையை முடித்து

கடந்த 03.11.2020 அன்று எதிரியின் மீது ச/பி. 304(A) இதசவின்படி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

11. எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் எதிரிக்கு பாதகமாக தோன்றும் சங்கதிகளைப் பொறுத்து கேள்வி கேட்கப்பட்டது. எதிரி சாட்சியத்தை மறுத்துரைத்தும், தமது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

12. இரு தரப்பு ஆவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்ததில், இவ்வழக்கிற்கு தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில், அரசு தரப்பில் எதிரி மீது இ.த.ச பிரிவு 304(A)ன் கீழும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா ? என்பதேயாகும்.

13. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டது.

## <u>தீர்வு</u>

14. கடந்த 01.08.2020ம் தேதி இரவு 19.45 மணியளவில் அ.சா.1ன் கணவர் கழுவந்தோண்டி ஏரிக்கரையிலிருந்து வீட்டிற்கு வருவதற்காக ஏரிக்கரை தெருவில் உள்ள பாப்பம்மாள் வீட்டின் அருகில் வடக்கிலிருந்து தெற்காக ரோட்டின் இடதுபுறமாக நடந்து வந்து கொண்டிருந்தபோது அதே சாலையில் அவருக்கு எதிர் திசையில் தெற்கிலிருந்து வடக்காக வந்த TN 61 S 4740 என்ற டிராக்டர் மற்றும் நம்பர் இல்லாத டிரைலரில் முருங்கைக்காய் ஏற்றி வந்த வாகனத்தை எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து ரோடு போட ஜல்லி கொட்டியிருந்ததில் ஒதுங்கி நின்று கொண்டிருந்தவரின் வலது காலின் பாதத்தில் மேற்படி வாகனம் ஏற்றியதில் அ.சா.1ன் கணவர் வலதுபக்கமாக விழுந்ததில் வலதுபக்க தலையில் பலத்த அடிபட்டு இறந்துபோக காரணமாக இருந்ததாக எதிரி மீது இந்த வழக்கானது முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

15.எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகள் வாய்மொழி சாட்சியமாக விசாரிக்கப்பட்டு சான்றாவணங்களாக அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.8 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

16. கடந்த 01.08.2020ம் தேதி இரவு 19.45 மணியளவில் கழுவந்தோண்டி ஏரிக்கரை தெருவில் உள்ள பாப்பம்மாள் வீட்டின் அருகில் விபத்து ஏற்பட்டது என்பதும், அந்த விபத்தில் அ.சா.1ன் கணவரின் வலதுபக்க தலையில் பலத்த அடிபட்டு இறந்துள்ளார் என்பதும் இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. மேலும், எதிரி தரப்பில் எதிரியின் அதிகேவம் மற்றும் அஜாக்கிரதை குறித்து மட்டும் தான் ஆட்சேபனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

17. மேற்படி ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை நிரூபிக்கம் விதத்தில் அரசு தரப்பில் முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3 ஆகவும், மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.4 ஆகவும், சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை அ.த.சா.ஆ.6 ஆகவும், பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ.6 ஆகவும், பிணக்கூறாய்வு சான்றிதழ் அ.த.சா.ஆ.7 அகவும், மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.த.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

18. எனவே, இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயம் யாதெனில், எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டி இந்த விபத்தினை ஏற்படுத்தினாரா? என்பதே ஆகும். அதுகுறித்து இந்நீதிமன்றம் பரிசீலனை செய்கையில், அ.சா.1 தனது சாட்சியத்தில், தன் கணவர் கழுவந்தோண்டியில் உள்ள ஏரிக்கரைக்கு வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நடந்து சென்றுக்கொண்டிருந்தார். அப்போது அவருக்கு எதிர் திசையில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த டிராக்டர் தன் கணவர் மீது மோதி விபத்தினை ஏற்படுத்தியதாக தங்கள் ஊரைச் சேர்ந்தவர் தன்னிடம் வந்து கூறினார் என்றும், தான் உடனடியாக சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது, தன் கணவருக்கு பின்பக்க தலையிலும், காலிலும் அடிபட்டிருந்தது என்றும், தாங்கள் உடனடியாக அவரை கார் மூலம் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம் என்றும், பின்னர் அவரை மேல்சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம் என்றும், அன்றைய தினம் இரவு அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் என்றும், தனது கணவர் மீது மோதி விபத்தினை ஏற்படுத்திய டிராக்டரை யார் ஓட்டினார்கள் என்று தனக்கு தெரியாது என்று சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் விபத்து நடந்த நேரம் இரவு நேரம் என்றால் சரிதான், இந்த விபத்து பற்றி தனக்கு நேரடியாக தெரியாது

என்றால் சரிதான், கேள்விப்பட்டுத்தான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் சரிதான் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

19. அ.சா.2 தனது சாட்சியத்தில் 2020ம் வருடம் ஒருநாள் இரவு 07.30 மணியளவில் தனது அப்பா ஏரிக்கரைக்கு சென்றார் என்றும், அப்போது தான் வீட்டிலிருந்தேன் என்றும், தங்கள் வீட்டிற்கு 500 மீட்டர் தொலையில் தனது அப்பா சாலையின் ஓரம் நின்றுக்கொண்டிருந்தபோது, தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த டிராக்டர் தனது அப்பாவின் மீது மோதியதில் தனது அப்பாவிற்கு காலிலும், தலையிலும் அடிபட்டதாக தனக்கு போன் மூலம் தகவல் கூறினார்கள் என்று சாட்சியமளித்துள்ளார். அ.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் விபத்து நடந்த நேரத்தில் தான் வீட்டிலிருந்தேன் என்றால் சரிதான் என்றும், சம்பவத்தை போன் மூலம் கேள்விபட்டுத்தான் சென்றேன் என்றால் சரிதான் என்றும், விபத்து குறித்து நேரடியாக தனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான் என்றும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 மற்றும் அ.சா.2 இவ்வழக்கின் கேள்விபட்ட சாட்சிகள் ஆவார்கள்.

20. அ.சா.3 தனது சாட்சியத்தில் தன்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சிய கையொப்பத்தை தனது சொந்த வேலையாக காவல் நிலையம் சென்றபோது போலீசார் தன்னிடம் பெற்றுக்கொண்டார்கள் என்று சாட்சியமளித்துள்ளதால், அ.சா.3 அரசுதரப்பில் பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார்.

21. அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சியங்களை பரிசீலனை செய்கையில், மேற்படி சாட்சிகள் அனைவரும் இந்த வழக்கு விபத்தை நேரில் பார்க்கவில்லை என்பது தெரிய வருகிறது. எதிரி தான் இவ்வழக்கு விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டியவர் என்று எதிரியை அடையாளம் காட்டவில்லை. எனவே, அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாணவங்கள் வாயிலாக எதிரி மீது சாட்டப்பட்ட குற்றத்தை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, சந்தேகத்தில் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டுமென இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

22. முடிவாக எதிரி மீது இ.த.ச பிரிவு 304(A)ன் கீழும் சுமத்தப்பட்ட குற்றத்தில் எதிரி **"குற்றவாளி இல்லை"** என்று தீர்மானித்து, எதிரியை கு.வி.மு.ச பிரிவு 255(1)ன் கீழ் **விடுதலை** செய்து இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

23. எதிரியால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிணைப் பத்திரத்தினை ரத்து செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

24. அரசு தரப்பில் இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அது குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைகள் நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01ம் நாள் சனிக்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(Sd/-P.Kanimozhi)
நீதித்துறை நடுவர் எண்.1,
ஜெயங்கொண்டம்.

<u>அட்டவணை : –</u>
<u>அரசு தரப்பு சாட்சிகள்:</u>

அ.சா.1 – தேன்மொழி

அ.சா.2 – கார்த்திகேயன்

அ.சா.3 – திருமுருகன்

அ.சா.4 – குணசேகரன்

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:</u>

அ.த.சா.ஆ.1 – புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1ன் கையெழுத்து

அ.த.சா.ஆ.2 – பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து

அ.த.சா.ஆ.3 – முதல் தகவல் அறிக்கை

அ.த.சா.ஆ.4 – மாதிரி வரைபடம்

அ.த.சா.ஆ.5 – சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை

அ.த.சா.ஆ.6 – பிரேத விசாரணை அறிக்கை

அ.த.சா.ஆ.7 – பிணக்கூறாய்வு சான்றிதழ்

அ.த.சா.ஆ.8 – மோட்டார் வாகன ஆய்வறிக்கை

**<u>அரசுத்தரப்பு சான்றுப்பொருட்கள்</u> :** இல்லை

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருட்கள்</u> :** இல்லை

**<u>குறிப்பு:</u>**

1. எதிரி வழக்கு விசாரணையின்போது பிணையில் இருந்தார்கள்.

2. சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்திவைக்கப்படவில்லை.

3. தீர்ப்பு பற்றி எதிரிக்கும், காவல்துறையினருக்கும் தெரிவிக்கப்பட்டது.

4. தீர்ப்பின் உண்மை நகல் மாண்புமிகு அரியலூர் மாவட்ட தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

(Sd/-P.Kanimozhi)
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**ஜெயங்கொண்டம்.**

//True Copy//

நீதித்துறை நடுவர் எண்.1,
ஜெயங்கொண்டம்.